## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்
## C.C.No.47/2017

2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 2 - (PW2) ஆக கூட்டுறவு சார்பு பதிவாளர் திரு.ராஜாசுவாமிநாதன் என்பவரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.த.சிவக்கொழுந்து, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜாசுவாமிநாதன் | வயது | : | |
| த/பெ. | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**30.01.2020**

**முதல் விசாரணை**

நான் கூட்டுறவு துறையில் பெரம்பலூர் சரக துணை பதிவாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். நான் அரியலூர் துணை பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுறவு சார்பதிவளாராக பணிபுரிந்தபோது அரியலூர் துணை பதிவாளர் செயல்முறைகள் ந.க.4449/2009 வே.சே.சா நாள் 30.11.2004-ன் படி ஆணையிடப்பட்ட பிரிவு 81 விசாரணையினை 21.02.2005-ல் முடித்து விசாரணை அறிக்கையினை 30.04.2005-ல் சமர்பித்தேன். மேற்படி 30.11.2004-ம் தேதியிட்ட உத்தரவு அ.சா.ஆ.2 ஆகும். இவ்வங்கியில் 31.08.2004-ல் நிலுவையில் இருந்த கடன்களை 100 சதவீதம் சரிபார்த்து அறிக்கையை சம்ர்பிக்கும்மாறு ஆணையிடப்பட்ட பெரம்பலூர் இணைபதிவாளர் செய்முறைகள் ந.க.5022/2005 வே.சே.சா. நாள் 14.09.2004-ன் படி பயிர்கடன்கள் சரிபார்க்கப்பட்டு சமர்பிக்கப்பட்ட 28.10.2004-ம் தேதியிட்ட தனிஅறிக்கையின் மீது பிரிவு 81-ன் கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டது. அத்தனி அறிக்கையில் 25 கடன்கள் ரூ.1,81,887-க்கு தவறுகள் நடந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த 25 கடன்களையும் சரிபார்த்ததில் கடன் எண் 937, 879, 1208 மற்றும் 427 ஆகிய நான்கு கடன்களில் தவறுகள் நடைபெற்றுள்ளதாக எனது விசாரணையில் கண்டறியப்பட்டது. திரு.வெங்கடாசலம் என்பவருக்கு வழங்கப்பட்ட கடனில் ரொக்க பகுதியாக ரூ.9,000 வழங்கப்பட்டதாக ஆவணங்கள் இருந்தது. அவரது உறுப்பினர் எண் 788 ஆகும். அவரது சேமிப்பு கணக்கு எண் 923-ல் அந்த தொகை ஏற்ப்பட்டு வவுச்சர் எண் 218-ன் மூலம் அவருக்கு பட்டுவாடா செய்யப்பட்டதாக ஆவணங்கள் இருந்தது. இந்த வவுச்சரில் இருந்த கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும். அந்த தொகை ரூ.9,000-த்தை தான் பெற்று கொள்ளவில்லை என்றும் வெங்கடாசலம் தெரிவித்தார். கடன் பேரேடு 30.06.2000 முதல் 06.07.2002 வரையிலான பேரேட்டில் ரொக்கம் 183-ல் வெங்கடாசலம் என்பவருக்கு கடன் வழங்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த பக்கம் எண் 183 அ.சா.ஆ.3 ஆகும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் ரொக்க/கடன் விற்பனை பட்டியல் வரிசை எண் 028799 கொண்டட ரசீது அ.சா.ஆ.4 ஆகும். வெங்கடாசலம் என்பவர் அவரது சேமிப்பு கணக்கிலிருந்து 26.05.2001-ம் தேதி ரூ.9,000 எடுத்ததாக பதிவு செய்யப்பட்டுள்ள பணம் பெறும் விண்ணப்பம் அ.சா.ஆ.5 ஆகும். வவுச்சர் எண் 218-ல் உள்ள கையொப்பம் தன்னுடைய கையொப்பம் இல்லை என்றும் இத்தொகையை தான் பெற்று கொள்ளவில்லை என்றும் என்னுடைய விசாரணையில் வெங்கடாசலம் தெரிவித்தார். 26.05.2001-ம் தேதியில் ரொக்க பொறுப்பு வகித்த செயலாளர் கந்தவேலை விசாரித்தபோது அன்றைதினம் தலைவர் காசிராஜன் தான் பணம் பட்டுவாடா செய்ததாக தெரிவித்தார். அதேபோல் தலைவர் காசிராஜனை விசாரித்தபோது தான் பொறுப்புகளை நிர்ணயம் செய்து கொடுத்ததாகவும் பணம் பட்டுவாடாவிற்கு பொறுப்பு நிர்ணயம் செய்யப்பட்டவர்களை

பொறுப்பு என்று தெரிவித்தார். எனது விசாரணையின் அடிப்படையில் மேற்படி தொகை 9,000-த்தை செயலாளர் கந்தவேல் தலைவர் காசிராஜன் என்பவரின் உடந்தையுடன் கையாடல் செய்திருப்பதாக முடிவு செய்தேன். ரெங்கநாதன் உறுப்பினர் எண் 1416 என்ற கடன் கணக்கை நான் சரிபார்த்தபோது அவருக்கு கடன் எண் 879-ன் மூலமாக ரெங்நாதனுக்கு ரூ.6,830 ரொக்கம் ரூ.6,600 மற்றும் உரம் ரூ.230 கடன்கள் வழங்கப்பட்டதாக பதிவுகள் இருந்தது. ரொக்கம் ரூ.6,600 தொகையை தான் பெற்று கொள்ளவில்லை என்றும் ஆனால் வவுச்சர் எண் 38-ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்று ரெங்கநாதன் தெரிவித்தார். அத்தொகை பட்டுவாடா செய்யப்பட்ட தேதியான 18.04.2001-ல் ரொக்க பொறுப்பு வகித்த எழுத்தர் சீனிவாசன் இத்தொகையை தலைவர் காசிராஜனே பட்டுவாடா செய்தார் என்று தெரிவித்தார். தலைவர் காசிராஜன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் இத்தொகை ரெங்கநாதனுக்கு வழங்கப்பட்டதா என்பதை குறித்து தனக்கு தெரியாது என்றும் இத்தொகைக்கு சீனிவாசனே பொறுப்பு என்று தெரிவித்தார். 30.06.2000 முதல் 06.07.2001 வரையிலான கடன் பேரேட்டில் கடன் எண் 879ஆக பக்கம் 125-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பக்கம் அ.சா.ஆ.6 ஆகும். 18.04.2001-ம் தேதி ரெங்கநாதன் என்பவர் தனது சேமிப்பு கணக்கிலிருந்து ரூ.6,600 பணம் பெற்று கொண்டதற்காக கொடுத்ததாக சொல்லப்படும் பணம் பெறுவதற்கான விண்ணப்பம் அ.சாஆ.7 ஆகும். ரொக்க/கடன் விற்பனை பட்டியல் வரிசை எண் 028710 கொண்ட ரசீது அ.சா.ஆ.8 ஆகும். 18.04.2001-ம் தேதி ரொக்க புத்தகத்தை எழுதிய சங்கத்தின் முதுநிலை எழுத்தர் ராமலிங்கமும் ரொக்க புத்தகத்தில் கையொப்பம் இட்ட செயலாளர் கந்தவேலும் உடந்தையாக செயல்பட்டுள்ளார்கள் என்று முடிவுக்கு வந்தேன். ரெங்கநாதனுக்கு ரூ.6,600 வழங்கப்பட்டதாக பதிவு செய்யபட்டு முதுநிலை எழுத்தர் மற்றும் செயலாளரால் கையொப்பம் இடப்பட்ட ரொக்க புத்தகத்தில் பக்கம் 52 அ.சா.ஆ.9 ஆகும். 10.07.2002-ல் குருசாமி என்பவருக்கு கடன்பதிவேடு பக்கம் 54 கடன் எண் 1208-ல் ரொக்க பகுதியாக ரூ.4,872-ம் உரபகுதியாக ரூ.838-ம் பட்டுவாடா செய்யப்பட்டதாக ஆவணங்கள் இருந்தது. அதில் ரொக்கம் பட்டுவாடா செய்யப்பட்டதாக வவுச்சர் எண் 461-ல் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் தான் அந்த தொகையை பெற்று கொள்ளவில்லை என்றும் குருசாமி எனது விசாரணையில் தெரிவித்தார். அப்போது ரொக்க பொறுப்பில் இருந்த சீனிவாசன் அத்தொகையை தலைவர் காசிராஜனே பட்டுவாடா செய்தார் என்றும் காசிராஜனை விசாரித்தபோது தான் பொறுப்பு நிர்ணயம் செய்து கொடுத்து விட்டதாகவும் பட்டுவாடா பொறுப்பில் இருந்தவர்களை அதற்கு பொறுப்பு என்றும் தெரிவித்தார். அதனடிப்படையில் பட்டுவாடா செய்யப்பட்டதாக பதிவு செய்து கையொப்பம் இட்டிருந்த முதுநிலை எழுத்தர் ராமலிங்கம் மற்றும் செயலாளர் கந்தவேல் ஆகியோர் தலைவர் காசிராஜன் உடந்தையுடன் சீனிவாசன் கையாடல் செய்ததாக முடிவு செய்தேன். குருசாமியின் கடன் எண் 1208 அதற்கான கடன் பேரேடு பக்கம் 54 அ.சா.ஆ.10 ஆகும். அவருக்கு தொகை வழங்கப்பட்டதாக 02.01.2001 முதல் 30.09.2002 வரையிலான ரொக்க புத்தகத்தின் பக்கம் 266-ல் பதிவு செய்யபட்டு அதில் முதுநிலை எழுத்தரும் செயலரும் கையெழுத்து செய்திருக்கிறார்கள். அந்த பதிவேட்டின் பக்கம் 266 அ.சாஆ.11 ஆகும். குருசாமி அவரது சேமிப்பு கணக்கிலிருந்து ரூ.4,872 பணம் பெற்றதாகவும் அதற்காக கொடுத்த விண்ணப்ப படிவம் அ.சா.ஆ.12 ஆகும். கலியமூர்த்தி என்பவருக்கு கடன் எண் 427 மூலம் ரூ.11,970/- 30.06.1999 கொடுக்கப்பட்டதாக கடன் பதிவேட்டு பக்கம் 73ல் பதிவு இருந்தது. அதில் ரொக்க பகுதி ரூ.11,500/-ஐ தான் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் இந்த வவுச்சர் எண்.447 உள்ளது தனது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் தன்னை ஏமாற்றி கையொப்பம் பெற்றுக்கொண்டனர் என்றும் எனது விசாரணையில் சொன்னார். 30.06.1999ல் ரொக்கபொறுப்பை வகித்த சீனிவாசன் வவுச்சர் எண்.447ல் கலியமூர்த்தியின் கையொப்பத்தை மட்டும் தான் பெற்றுக்கொண்டதாகவும் ரூ.11.500/-ஐ சங்கத்தலைவர் காசிராஜனே எடுத்துக்கொண்டார் என்றும் இத்தொகை கலியமூர்த்திக்கு வழங்கப்படவில்லை என்று எனது விசாரணையில் தெரிவித்தார். விசாரணையின் அடிப்படையில் எழுத்தர் சீனிவாசன் என்பவரால் தொகை கையாடல் செய்யப்பட்டுள்ளது என்றும் தலைவர் காசிராஜன் உடந்தையாக செயல்பட்டுள்ளார் என்றும் முடிவு செய்தும் மேலும் வவுச்சர் எண் 447ஐ தயாரித்ததோடு ரொக்கபுத்தகத்தை எழுதிய

சங்க முதுநிலை எழுத்தர் ராமலிங்கமும் ரொக்கபுத்தகத்தில் கையொப்பமிட்ட செயலாளர் கந்தவேல் ஆகியோரும் மேற்காணும் கையாடலுக்கு உடந்தையாக செயல்பட்டுள்ளார்கள் என்று முடிவு செய்தேன். 28.06.1999 முதல் 30.06.2000 வரையிலான கடன் பேரிட்டில் பக்கம் 73ல் கலியமூர்த்தி என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள கடன் பதிவேடு அ.சா.ஆ.13 ஆகும். கலியமூர்த்தி என்பவர் அவரது சேமிப்பு கணக்கிலிருந்து 30.06.1999ம் தேதி ரூ.11,500/- எடுத்ததாக பெறப்பட்டுள்ள பணம் பெறும் விண்ணப்பம் அ.சா.ஆ.14 ஆகும். 30.06.1999ம் தேதி கலியமூர்த்திக்கு ரூ.370/- உரம் விற்பனை செய்யப்பட்டதாக கொடுக்கப்பட்ட ரசீது அ.சா.ஆ.15 ஆகும். மேற்படி கலியமூர்த்திக்கு ரூ11,500/- பட்டுவாடா செய்யப்பட்டதாக பதிவு செய்யப்பட்டு முதுநிலை எழுத்தர் மற்றும் செயலாளரால் கையொப்பமிடப்பட்ட ரொக்கபுத்தகத்தின் பக்கங்கள் 60 மற்றும் 61 அ.சா.ஆ.16 வரிசை (2எண்ணிக்கை) நான் விசாரணை செய்த போது ரெங்கநாதன், வெங்கடாசலம், கலியமூர்த்தி, குருசாமி, காளிமுத்து, காசிராஜன், சீனிவாசன், கந்தவேல், ராமலிங்கம், இளவரசன், பாலுசாமி, குழந்தைவேல் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து நான் பதிவு செய்த ரெங்கநாதனின் வாக்குமூலம் அ.சா.ஆ.17 வெங்கடாசலத்தின் வாக்குமூலம் அ.சா.ஆ.18 கலியமூர்த்தியின் வாக்குமூலம் அ.சா.ஆ.19 குருசாமியின் வாக்குமூலம் அ.சா.ஆ.20 காளிமுத்துவின் வாக்குமூலம் அ.சா.ஆ.21 காசிராஜனின் வாக்குமூலம் அ.சா.ஆ..22 சீனிவாசனின் வாக்குமூலம் அ.சா.ஆ.23 கந்தவேலின் வாக்குமூலம் அ.சா.ஆ.24 ராமலிங்கத்தின் வாக்குமூலம் அ.சா.ஆ.25 இளவரசனின் வாக்குமூலம் அ.சா.ஆ.26 பாலுசாமியின் வாக்குமூலம் அ.சா.ஆ.27 குழந்தைவேலின் வாக்குமூலம் அ.சா.ஆ,28 ஆகும் எனது விசாரணை முடித்து பிரிவு 81-ன்கீழ் தாக்கல் செய்த விசாரணை அறிக்கை அ.சா.ஆ.29 ஆகும். போலீசார் விசாரணை செய்தார்கள். நான் சரிபார்த்து ஆவணங்களை ஒப்படைத்து வாக்குமூலம் கொடுத்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

இல்லை.